[12th August 1965

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத்: இதில் பணம் சம்பந்தமான பிரச்னை மட்டும் அடங்கிவிடவில்லை. கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்னையும் அடங்கியிருக்கிறது. எதாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க தயங்கமாட்டார்கள்.

திரு. எஸ். கே. சம்பந்தன்: அவ்வாறு வரவேற்பு கொடுப்பது இப்போது சர்வ சாதாரணமாகிவிட்டது, என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அது அவசியம் இல்லாததால் அரசாங்கத்தினிடம் பர்மிஷன் வாங்கியும் கூட அதைச் செய்யக்கூடாது என்று அறவே தடைசெய்து உத்தரவு போட அரசாங்கத்திற்கு யோசனை உண்டா?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத்: அம்மாதிரி உத்தேசம் எதுவும் இல்லை.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அமைச்சர்களுக்கு வரவேற்பு அளிக்கும்போது அனுமதி பெற்றுக்கொண்டுதான் வரவேற்பு அளிக்கப்படுமா? அனுமதி இல்லாமல் கூட அளிக்கப்படுமா?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத்: மத்திய, மாநில அமைச்சர்கள், கவர்னர் போன்றவர்களுக்கு மட்டும் வரவேற்பளிக்க பணம் செலவழிக்கலாம், அதற்கு அனுமதி தேவையில்லை என்று எதகனவே உத்தரவிருக்கிறது.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அமைச்சர்களுக்கு வரவேற்பு அளிக்க இந்த அளவு தொகை செலவழிக்கலாம் என்றும் மற்றவர்களுக்கு அந்த அளவுத் தொகை செலவழிக்க அனுமதியில்லை என்று அரசாங்கம் சொல்கிறதா? அந்தத்தொகை செலவழித்து வரவேற்பு அளிப்பதுதான் அரசாங்கத்தின் கொள்கைக்கு மாறுபட்டதா? அல்லது மற்றவர்களை வரவேற்பதே மாறுபட்டதா?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத்: முன் அனுமதி பெற்று அவர்கள் செலவழித்துக் கொள்ளலாம். பஞ்சாயத்துக்கள் சம்பந்தப்பட்ட வரையில் அவைகளுக்கு பணவசதி இருக்கிறதா, பொதுச் செலவுகளுக்கு எல்லாம் போக வரவேற்பு அளிக்க போதுமான பணம் இருக்கிறதா, என்பதைக் கருதித்தான் அனுமதி அளிக்கப்படும்.

* 130 Q.—Sri S. K. SAMBANDHAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any provision for Municipalities and Panchayats to accord welcome addresses to political leaders?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத்: மாண்புடைய பெரியார்கள் நகராட்சிகளுக்கு வரும் தருவாயில் அவர்களுக்கு வரவேற்பிதழ் அளிப்பதற்காகும் செலவை நகராட்சி மன்றம் அரசாங்கத்தின் அனுமதியுடன் ஏற்றுக் கொள்ள தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாடு பஞ்சாயத்துச் சட்டத்தில் இத்தகைய ஷரத்து எதுவும் இல்லை. வரவேற்பிதழ்களை அளிப்பதற்காக உள்ளாட்சி மன்றங்களுக்காகும் செலவு

12th August 1965]

சிறப்புச் செலவுகள் என்னும் தலைப்பின் கீழ் வரும். இச்செலவிற்காக நகராட்சிகள் அரசாங்கத்திடமிருந்தும் பஞ்சாயத்துக்கள் கலெக்டரிடமிருந்தும் முன் அனுமதி பெறவேண்டும்.

திரு. எஸ். கே. சம்பந்தன் : இந்த மாதிரி முன் அனுமதி பெற்று வரவேற்பு கொடுத்த பஞ்சாயத்துக்கள் எத்தனை ஒரு ஆண்டிலோ அல்லது ஒரு மாதத்திலோ என்று அமைச்சர் அவர்கள் சொல்லமுடியுமா ?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் : அந்தத் தகவல் இல்லை.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, முன் அனுமதி இல்லாமல் பஞ்சாயத்துத் தலைவர்கள், உறுப்பினர்கள் சொந்தச் செலவில் வரவேற்பு அளித்தால் அதைப்பொறுத்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்காது அல்லவா ?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் : சொந்தச் செலவானாலும் அதிகாரிகளின் முன் அனுமதி பெற்றுத்தான் அவர்கள் செய்ய வேண்டும்.

திரு. சி. பி. சிற்றரசு : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர்கள் வருகிறபொழுது அவர்களுக்கு வரவேற்பு அளிக்க தாராளமான மனதோடு சர்க்கார் அனுமதி அளிக்கிறதா ?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் : முதல் கேள்வியிலேயே பதில் சொல்லும்போது இதைப்பற்றிக் குறிப்பிட்டேன். மாநில அமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள், கவர்னர் போன்றவர்களுக்கு அனுமதி தேவையில்லை. மற்றவர்களுக்கு அனுமதி பெற்றுத்தான் செய்யவேண்டும்.

MR. CHAIRMAN : The question refers to political leaders. Questions are over. We will now take up the Government Bills.

SRI N. V. NATARAJAN : On a point of order, Sir.
நேற்றைய தினத்தில் இருந்து சென்னையிலே நடைபெற்றுவரும் பஸ் போக்குவரத்து . . .

MR. CHAIRMAN : I have ruled the hon. Member's motion out of order.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS LAND ENCROACHMENT (AMENDMENT) BILL, 1965 (L.A. BILL NO. 12 OF 1965).

THE HON. SRI V. RAMAIAH : Mr. Chairman, Sir, I move—

"That the Madras Land Encroachment (Amendmen) Bill 1965 (L.A. Bill No. 12 of 1965), as passed by the Assembly, be taken into consideration."

a **Printed as Appendix II on pages 651-657 infra.**